ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

மே 2018

வேணு 23 | கானம் 10

தனி பிரதி ₹*15*


ஆண்டு சந்தா ₹*180*

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை



Delivered by India Post www.indiapost.gov.in


ராதா கல்யாணம், சிவகாசி நாமத்வார், 15 ஏப்ரல்



மஹாமந்திரக் கூட்டுப்பிரார்த்தனை, அருப்புக்கோட்டை, 15 ஏப்ரல்







# மதுரகீதம்

## ஆபத்பந்துவும் நீதானே!

ராகம்: கேதார கேளளை

தாளம்: ஆதி

**பல்லவி**

ஆபத்பந்துவும் நீதானே!
அனாத ரக்ஷகனும் நீதானே! (ஆபத்)

**அனுபல்லவி**

கற்பக தருவும் காமதேனுவும்
கஸ்தூரி ரங்கனே காவேரி ரங்கனே (ஆபத்)

**சரணங்கள்**

மகரத்தின் வாயில் சிக்கி – தன்
நிகரில்லாத ஆனை அரசனும்
அகரமுதலே என்று பிளிரிட
மகர குழைக் காதன் நீ ஓடி வந்தாய் (ஆபத்)

பாண்டவர் ஐவரும் பகடை ஆடி
அண்டி வந்த மனைவியை அடிமையாக்கி
ஆண்டர் கூட்டமும் கண்டு களித்திட
உண்டு நான் என்று அபயம் அளித்தாய் (ஆபத்)

உத்தரை வயிற்றில் குடிக்கொண்ட
பத்தரை மாத்து தங்கமாம் பரீக்ஷித்தை
குதிரை குரலுடையோன் அழித்திட முனைந்திட
ஆநிரை மேய்த்திட்ட நீயல்லவோ காத்தாய் (ஆபத்)


---

**முன் அட்டை:**

ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஸ்வாமி கோவில், பெங்களூரு

**பின் அட்டை:**

ஸ்ரீ வானரராஜசிம்ஹன் கோவில், காங்கேயம்



மதுரமுரளி

வேணு 23 | கானம் 10

# பொருளடக்கம்

மதுரமான மஹனீயர்-266..........5

கேள்வி பதில்....................................11

பஜனம்-நாதோபாஸனம் என்ன வித்தியாசம்?...................12

ப்ரேமிகவரதனுக்கு ஒரு கடிதம்....................................14

ஒரு உன்னத உரையாடல்...............................................16

பாலகர்களுக்கு ஒரு கதை................................................23

சத்சங்க செய்திகள்.........................................................25

மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை...................................30

பாரம்பரிய பொக்கிஷங்கள்....................................32

சைதன்ய மஹாப்ரபு................................34

படித்ததில் பிடித்தது................37

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

# மதுரமான மஹனீயர்

- டாக்டர் ஆ பாக்யநாதன்

(ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின்
அந்தரங்க செயலாளர்)

ஏப்ரல் பதினான்காம் தேதி காலை புது வருடப் பிறப்பு பூஜையானது ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீ ப்ரேமிக ஸ்ரீனிவாச ஸ்வாமி சன்னிதியில் நடந்தது. பஞ்சாங்கப் படனம் நடந்தது. பிறகு அங்கிருந்து கிளம்பி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மதுரை சென்றடைந்தார்கள். மதுரையில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் நாமத்வாரில் இரவு தங்கினார்கள்.

மறுநாள் காலை நான்கு மணிக்கு எழுந்து அங்கிருந்து கிளம்பி காரியாப்பட்டி என்ற ஊருக்குச் சென்றார்கள். காரியாப்பட்டியில் ஸ்ரீ லக்ஷ்மிகாந்தன் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி தம்பதியினரும், ஸ்ரீ காந்தீஸ்வரன் அவர்களும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை வரவேற்பதற்காக ஆசையுடன் காத்துக் கொண்டிருந்தனர். பக்தர்கள் பெரும் திரளாக காத்திருந்தனர். முதல் நாள் இரவு சற்று மழை தூறலும் பொழிந்திருந்தது. பிறகு, நல்ல நேரத்திற்காக ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சிறிது நேரம் வாசலில் காத்துக் கொண்டிருந்தார். அதைத் தொடர்ந்து 'கோ' பூஜை நடந்தது. 'கோ' பூஜை முடிந்ததும் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் உள்ளே செல்ல, அவரைத் தொடர்ந்து பக்தர்கள் எல்லோரும் உள்ளே சென்றார்கள். காரியாப்பட்டி நாமத்வார் மிகவும் அழகாக, நேர்த்தியாக, அமைக்கப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும், நாமா சொல்வதற்கு ஒரு பெரிய இடமாகவும், பகவான் க்ருஷ்ணனுடைய அருளால் அமைந்திருப்பதைக் கண்டு எல்லோரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பல வெளியூர்களிலிருந்தும் நாமத்வார் அன்பர்கள் இந்த நாமத்வார் திறப்பு விழாவிற்கு வந்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து, அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த ஸ்ரீ மாதுரீஸகீ-ப்ரேமிகவரதன் ஸ்வாமிக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. பக்தர்கள் எல்லோரும் நாமா சொல்லிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள். திருமஞ்சனம் முடிந்தபிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நாமத்தின் மகிமையையும் நாமத்தின் அவசியத்தைப் பற்றியும் அருளுரை வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து அங்கு நாமத்வார் கட்டுவதற்காக எல்லாவிதத்திலும் தங்களை

அர்ப்பணித்துக் ஸ்ரீ காந்தீஸ்வரன் தம்பதிகளுக்கும், அந்த நாமத்வாருக்கான எல்லா முயற்சிகளும் எடுத்த ஸ்ரீ லக்ஷ்மிகாந்தன் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி தம்பதியருக்கும், அந்த நாமத்வாரை அழகாகக் கட்டிய இஞ்சினியர் ஸ்ரீ நாராயணன் ஸ்ரீமதி மஞ்சுளா தம்பதியருக்கும், அந்த இடத்தை நமக்குக் கொடுத்த ஸ்ரீ ராஜகோபால் ஸ்ரீமதி ஜயா தம்பதியருக்கும் ப்ரஸாதம் வழங்கினார். அதைத் தொடர்ந்து அங்கு வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் ப்ரேமிகவரதனுக்குப் பூஜை செய்த தீர்த்த ப்ரஸாதத்தை வழங்கினார்கள். மதுரை நாமத்வாரில் சேவை செய்துவரும் ஹரிதாஸ் மிகவும் பொறுப்புடன் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார்.

பிறகு அங்கிருந்து கிளம்பி சிவகாசி சென்றார். சிவகாசி நாமத்வாரில் ராதா கல்யாணத்திற்கு பவானி அக்கா மற்றும் சிவகாசி பக்தர்கள் மிகவும் அழகாக ஏற்பாடுகளை செய்திருந்தனர். ஸ்ரீமதி அனுஷா பாலாஜியின் தலைமையில் ராதா கல்யாணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சென்ற பிறகு, அந்த ராதா கல்யாண உத்சவத்தை நடத்தி பின்னர் பூர்த்தி செய்து வைத்து, அங்கு கூடியிருந்த ஏறக்குறைய இரண்டாயிரம் பக்தர்களுக்கும், தன் கைகளினாலேயே ஒரு ரூபாய் நாணயம் வழங்கி அவர்களை ஆசீர்வாதம் செய்தார்.

பிறகு அங்கிருந்து கிளம்பி மதியம் அருப்புக்கோட்டை சென்றார். அருப்புக்கோட்டையிலும் யோகி ராம்சுரத்குமாருக்கு புதிதாக ஒரு ப்ரம்மாண்டமான ஆலயம் அமைந்துள்ளது. அருப்புக்கோட்டை சந்திரசேகர் அவர்களின் முயற்சியில் ஸ்ரீ சிவராமன் எல்லாவற்றையும் முன் இருந்து கவனித்து வருகின்றார். வருகின்ற ‘மே’ மாதம் இரண்டாம் தேதி அதற்கான கும்பாபிஷேகம். முதலில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அந்த இடத்தை அவர்கள் தேர்வு செய்யும்பொழுதும் சென்று பார்த்திருந்தார். அதற்கான பூமி பூஜையின்பொழுதும் சென்றிருந்தார். இப்பொழுது அது மிகவும் அழகாக வந்திருந்ததைக் கண்டு எல்லோருக்கும் மிகவும் சந்தோஷம். சிறிது நேரம் அங்கிருந்து நாம ஸங்கீர்த்தனம் செய்துவிட்டு சில பக்தர்களின் வீட்டிற்குச் சென்றார். பிறகு, அந்த ஊரிலே நமது GOD ஸத்ஸங்கத்தின் அன்பரான அருப்புக்கோட்டை கண்ணன் அவர்கள், ‘குயின்ஸ் இரத்தினவேல் மாரித்தாய் நாச்சியார்’ கல்யாண மண்டபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் அருளுரையை ஏற்பாடு செய்திருந்தார். அதற்கு முன்பாக கோபகுடீரத்தைச் சேர்ந்த குழந்தைகள் ஒரு சிறிய நடன நிகழ்ச்சியியை நடத்தினார்கள். அது மிகவும் அருமையாக அமைந்தது. அதைத் தொடர்ந்து ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அங்கு

உரையாற்றி சிறிது நேரம் ஒரு கூட்டுப் ப்ரார்த்தனையை செய்தார்கள். அருப்புக்கோட்டை கல்யாண மண்டபத்தில் 2500–3000 பக்தர்கள் அமைதியாகக் கூடியிருந்தார்கள். பிறகு அங்கிருந்து கிளம்பி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் காரியாப்பட்டி நாமத்வாருக்குச் சென்றார். காலையில் அவசரமாகக் கிளம்பிவிட்டதால் திரும்பி அந்த நாமத்வாருக்குச் சென்று, அங்கிருப்பவர்களுக்கு அந்த நாமத்வாரை தொடர்ந்து எப்படி நடத்த வேண்டும், என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். பின்னர் அங்கு ஓய்வெடுத்துக் கொண்டு, காலை நான்கு மணிக்கு கிளம்பி மதுரை வந்து சேர்ந்தார்கள்.

மத்ஸ்யாவதாரம் தோன்றிய புனிதமான பாண்டிய தேசமான மதுரையில் பிரம்மாண்டமான நாமத்வார் வந்திருப்பதில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு மிகவும் சந்தோஷம். வாசலில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்; நாமத்வாரின் மேல் ஒரு குட்டி கிருஷ்ணன் எல்லோரையும் நாமா சொல்ல வரவேற்கும் வண்ணம் அமைந்துள்ளார்; யானை காத்துக் கொண்டிருந்தது; பசு காத்துக் கொண்டிருந்தது. முதலில் யானைக்கு ‘கஜ’ பூஜை செய்தார், ‘கோ’ பூஜை செய்தார். உள்ளே சென்று மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு அபிஷேகம் செய்தார். அபிஷேகத்திற்குப் பிறகு நாம ஸங்கீர்த்தனமும் பக்தர்களின் பஜனைகளும் நடந்து கொண்டிருந்தன. Divine Life Societyயினுடைய மதுரை கிளையின் ஸ்வாமி சுந்தரானந்தா வந்திருந்தார். முதன் முதலில் பத்து வருடங்களுக்கு முன்பாக 2008ல் மதுரை நாமத்வாரை ஒரு வாடகை கட்டிடத்தில் ஆரம்பிக்கும்பொழுது அவர்தான் அதை திறந்து வைத்தார். அந்த சமயத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களால் நேரில் கலந்து கொள்ள முடியவில்லை. பத்து வருடங்களுக்கு முன் நாமத்வாரை திறந்து வைத்த அவரை இந்த விழாவிற்கு அழைக்க வேண்டும் என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு மிகவும் ஆசை. முதன் முதலில் இருபது வருடங்களுக்கு முன்னால் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மதுரையில் ஸ்ரீ மதன கோபாலஸ்வாமி சன்னிதியில் உபன்யாஸம் செய்தார்கள். அப்பொழுது ராமானுஜதாஸரிடம் அங்கு சனிக்கிழமை தோறும் நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டும் என்று சொல்லியிருந்தார்கள். அதை, தொடர்ந்து அவர் செய்து வந்தார். அதனால் முதலில் சுந்தரானந்தா ஸ்வாமிக்கு மலர்மாலையும் அணிவித்து shawlம் அணிவித்தார்கள். அடுத்தது ராமானுஜதாஸர் மதுரையில் ஆரம்பத்திலிருந்து விடாமல் சத்சங்கம் நடத்தி வந்ததற்காக அவருக்கு ப்ரஸாதம் கொடுத்தார்கள். அடுத்தது நாமத்வாருக்கு உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்த

அவரது தகப்பனாரான திரு.கதிரேசனைப் போலவே சேவை செய்த ஸ்ரீ நேஹ்ருப்ரகாஷ் ஸ்ரீமதி காஞ்சனா தம்பதியனருக்கு ப்ரஸாதம் வழங்கினார். இந்த நாமத்வார் அமைவதற்காக இடம் சமர்ப்பித்த ஸ்ரீ தியாகராஜன் ஸ்ரீமதி சுதா தம்பதியினருக்கும் அவரின் பெற்றோர்கள் ஸ்ரீ ஸ்வாமிநாதன் ஐயர் ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி தம்பதியினருக்கும் பிரசாதம் வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து இஞ்சினியர் ஸ்ரீ நாராயணன் ஸ்ரீமதி மஞ்சுளா தம்பதியினருக்கும் ப்ரஸாதம் வழங்கினார். பிறகு ஸ்ரீ ஸ்வாமிஜி குரு பக்தியின் மேன்மையைப் பற்றி சிறிது நேரம் உபன்யாஸம் செய்தார். எல்லா பக்தர்களுக்கும் தீர்த்த ப்ரஸாதம் வழங்கினார்.

அங்கிருந்து கிளம்பி ராஜபாளையம் சென்றார். ராஜபாளையத்தில் உள்ள ஒரு ராமர் கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை வரவேற்க சில பக்தர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். அங்கு நம் சத்சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி என்கிற பக்தை காத்துக் கொண்டிருந்தார். அவர்தான் தொடர்ந்து ராஜபாளையத்தில் வாரந்தோறும் நாம ஸங்கீர்த்தனம் செய்து வருபவர். அந்த ராமர் கோவிலானது கருங்கற்களால் கட்டப்பட்ட ஒரு கோவில். மூன்று தலைமுறைகளுக்கு முன்பாக இருந்த ஒரு மாதுஸ்ரீ சிறந்த ராம பக்தையாக இருந்தாள். மூன்று முறை ராஜபாளையத்திலிருந்து அயோத்திக்கு நடந்து சென்றிருக்கிறார்களாம். அவர் கருங்கல்லால் ராமருக்கு ஒரு அழகான கோவில் கட்டியுள்ளார். மிகவும் அருமையாகவும் நேர்த்தியாகவும் இருந்தது. அந்த ராமரை தரிசனம் செய்துவிட்டு சிறிது நேரம் உபன்யாஸம் செய்துவிட்டு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் மதுரை வந்து சேர்ந்தார்.

மதுரையில் அன்று மாலை ஸ்ரீ மதன கோபால ஸ்வாமி கோவிலில் நடந்த ஸத்ஸங்கத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். உபன்யாசம் தொடங்குவதற்கு முன்பாக மதுரை நாமத்வார் அமைவதற்கு உடலாலும் பொருளாலும் உறுதுணையாக இருந்த அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கினார். ஸ்ரீ மதன கோபால ஸ்வாமியையும் தரிசனம் செய்தார். பின்னர் மதுரையில் நாமத்வார் வந்து இரவு தங்கினார். மறுநாள் காலை மதுரை நாமத்வாரில் பக்தர்களுடன் சேர்ந்து சிறிது நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பி பெரியகுளம் சென்றார்.

பெரியகுளத்தில் ரேணுகா வித்யாலயத்தில் நம்முடைய ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை வரவேற்க எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீமதி விஜயராணி அவர்களும் ஸ்ரீமதி லதா அவர்களும் எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தனர். அங்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்காக ஒரு புதிய அறையானது ஸ்ரீ ராம் அர்ஷித் என்ற பக்தரால் நேர்த்தியாகக் கட்டப்பட்டிருந்தது. அவர் அந்த அறை நம்முடைய ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் வந்துதான் திறந்து வைக்க வேண்டும் என்று வெகு நாட்களாக காத்துக் கொண்டிருந்தார். அந்த வளாகத்து திறப்பு விழா நடந்தது. மாணவர்களிடையே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சிறிது நேரம் பேசினார்கள். அங்கிருந்து கிளம்பி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பெரியகுளம் நாமத்வார் வந்தடைந்தார். வரும்பொழுது இரவு மணி ஏழரை இருக்கும். அந்த நேரத்திலும் பக்தர்கள் நாமத்வார் முழுவதும் நிரம்பி இருந்தனர். வீதியில் எல்லாம் பக்தர்கள் நின்று கொண்டிருந்தனர். அந்த நேரத்திலும் தன்னைப் பார்ப்பதற்காக பக்தர்கள் இப்படி ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் நெகிழ்ந்து போனார்கள். சிறிது நேரம் அவர்களிடம் நாமத்தின் மகிமை, குரு பக்தி, ஸத்ஸங்கம் போன்றவற்றைப் பற்றி உரையாற்றினார்கள். பிறகு, வந்திருந்த பக்தர்களுக்கெல்லாம் தன்னுடைய கையினாலேயே ஒரு ரூபாய் நாணயம் கொடுத்து அவர்களை சந்தோஷப் படுத்தினார்கள். இரவு பெரியகுளம் நாமத்வாரில் ஓய்வெடுத்துக் கொண்டு மறுநாள் காலை ஆறு மணிக்கு அக்ஷய த்ரிதியையை முன்னிட்டு அங்கு நாம ஸங்கீர்த்தனத்தை ஆரம்பித்தார். சிறிது நேரம் அவர்களுடன் சேர்ந்து நாமகீர்த்தனம் செய்துவிட்டு, அருகிலிருந்த பக்தரின் வீட்டிற்குச் சென்றுவிட்டு, அங்கிருந்து கிளம்பி உடுமலைப்பேட்டை சென்றார்.

உடுமலைப்பேட்டையிலே புதிதாக நாமத்வார் கட்டுவதற்கு ஒரு இடம் வாங்கப் பட்டிருந்தது. அன்று அக்ஷய த்ரிதியை ஆனதால், பூமி பூஜை செய்வதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீமதி பிரமிளா, ஸ்ரீ நேரு, ஸ்ரீ காந்தீஸ்வரன் அவர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். அங்கு கூடியிருந்த பக்தர்களிடம் சிறிது நேரம் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் பேசிவிட்டு அங்கிருந்து கிளம்பி நேராக கோவிந்தபுரம் வந்து சேர்ந்தார்.

கோவிந்தபுரத்திலே நமது ஸத்ஸங்கத்தைச் சேர்ந்த கல்யாணக்ருஷ்ணன் மற்றும் பம்மல் ஸ்வாமிநாதன் இருவரும் ஹரித்வார் சென்று அக்ஷய த்ரிதியை அன்று நமது ஸ்வாமிஜிக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று கங்கை நீர் எடுத்து வந்திருந்தார்கள். அவர்கள் பக்தி சிரத்தையுடன் நமது ஸ்வாமிஜிக்கு அந்த நீரை அபிஷேகம் செய்தார்கள். பிறகு, அக்ஷய த்ரிதியையாக இருப்பதால், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள்

ஸ்ரீ பகவந்நாம போதேந்திராளின் அதிஷ்டானத்திற்கும், யோகி ராம்சுரத்குமார் பஜனாச்ரமத்திற்கும் சென்று வந்தார். அன்று இரவு, கோவிந்தபுரம் சைதன்ய குடீரத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

மறுநாள் காலை ஐந்து மணிக்கு எழுந்திருந்து அங்குள்ள ஜகந்நாத ஸ்வாமிக்கு ப்ரபோதனம் செய்தார். ப்ரபோதனம் செய்துவிட்டு அங்கிருந்து கிளம்பி நேராக சேங்கனூர் சென்றார். சேங்கனூரில் வழக்கம் போல ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவினுடைய பாதுகைகளுடைய புறப்பாடு நடந்தது. பெங்களூரிலிருந்து நிறைய பக்தர்கள் நாராயணீயம் பாராயணம் செய்வதற்காக சேங்கனூர் வந்திருந்தார்கள். அவர்களிடையே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், குருவாயூரப்பனுக்கும் பாகவதத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றி பேசினார்கள். பிறகு, அங்கிருந்து கிளம்பி சென்னை வந்து சேர்ந்தார்.

இப்படியாக, நமது மதுரை நாமத்வாரும், காரியாப்பட்டி நாமத்வாரும் இந்த புது விளம்பி வருடத்தில் பகவானின் அருட் கொடையாக நமக்குக் கிடைத்துள்ளன. மேலும், இந்தப் புது வருடத்தில் பல நாமத்வார்கள் வந்து, இந்த நாமத்தை பக்தர்கள் அனைவரும் சொல்லி எல்லோருக்கும் குருவருளும் திருவருளும் கிடைக்க கோபாலன் அனுக்ரஹம் செய்யட்டும்.

*நாமம் லாபம்! நாமம் லாபம்! நாமம் லாபம்!*
*நாமம் லாபம்! நாமம் லாபம்! நாமம் லாபம்!*

*நிறைய நாம நிதி சேர்ப்போம்!*
*நாமம் ஒன்றே போதும்!*
*கவலை வேண்டாம்!*
*நல்லது நடக்கும்!*

*நாமம் சொல்லி கேட்போம்!*
*நாமம் சொல்லி பெறுவோம்!*

*எப்பொழுதும் எங்கும் வெற்றிதான்!*
*தோல்வி இல்லை!*

*- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி (அக்ஷய த்ரிதியை அன்று)*

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

**நீங்கள் அடிக்கடி சொல்வது போல் நானும் என்னால் முடிந்த வரையில் நாம பிரச்சாரம் செய்ய ஆசைப்படுகின்றேன். எனக்கு ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?**

**சிலசமயங்களில், நாம் ஏதாவது விலைமதிப்புள்ள பொருளை பலருக்கு கொடுக்க விரும்புவோம். அப்பொழுது நாம் யாருக்கு முதலில் கொடுக்க ஆசைப்படுவோம்? யாரிடம் அந்தப் பொருள் இல்லையோ, அல்லது அந்தப் பொருளை யாரால் சம்பாதித்துக் கொள்ள முடியாதோ, அல்லது வேறு யாரும் அந்தப் பொருளை அவர்களுக்குக் கொடுக்க முன்வர மாட்டார்களோ, அவர்களுக்கு அதைக் கொடுத்தால்தானே நியாயம். அதுபோல் நாமத்தை, ஏற்கனவே தெய்வ வழிபாடுகளில் இருப்பவர்களிடம் கொண்டு சேர்ப்பதைக் காட்டிலும், தெய்வத்தைப் பற்றி ஏற்கனவே நிறைய தெரிந்து வைத்திருப்பவர்களைக் காட்டிலும், அத்தகைய ஒரு சூழ்நிலை உள்ள குடும்பத்தை உடையவர்களைக் காட்டிலும், இதெல்லாம் நமக்குக் கிடைக்குமா? இதெல்லாம் நமக்கு யார் சொல்லித் தரப்போகின்றார்கள்? நம்மையும் அன்புடன் அணைத்து தெய்வத்தை அடைய வழி சொல்பவர்கள் உண்டா? என்று ஏங்குபவர்களிடம் முதலில் கொண்டு சேருங்கள். அப்படி செய்தால்தான் அது சரியான நாமபிரச்சாரம் ஆகும். போதேந்திராள் இவ்வளவு ஒரு எளிய வழியைக் காட்டி ஸித்தாந்தம் செய்திருக்கும் பொழுது அதை நாம் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி காண்பிக்காமல் போனால் நாம் வஞ்சகர்களாக ஆகிவிடுவோம்.**

**நான் தினமும் வாழ்வில் பின்பற்றும்படியாக ஒரு அறிவுரை சொல்லுங்களேன்.**

**தினமும் ஏதாவது ஒரு விதத்தில் ஒரு சிறு உதவியை யாரவது ஒருவருக்குச் செய். ஒரு இனிமையான நம்பிக்கை அளிக்கக் கூடிய ஒரு வார்த்தையை ஒருவருடனாவது பரிமாற்றம் செய்து கொள்.**

# பஜனம்-நாதோபாஸனம் என்ன வித்தியாசம்?



பகவானை அடைய எவ்வளவோ மார்க்கங்கள் உள்ளன. அவைகளுள் எளிமையானதும் இனிமையானதுமான மார்க்கம் பக்தி மார்க்கம் தான். "பக்த்யா ஸுலபோ பகவான்" என்றபடி பக்திக்கு பகவான் சுலபமாகக் கிடைப்பது போல் வேறெதற்கும் கிடைப்பதில்லை. பக்தி செய்வது நமக்கும் ஸுலபமாக உள்ளது.

பக்தியிலேயே பஜனம், நாதோபாஸனம் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. நாம் செய்வது பஜனம் அல்லது ஸங்கீர்த்தனம். மற்றொன்று 'ஸங்கீதம்' அல்லது நாதோபாஸனம். நாதோபாஸனையும் பஜனையும் எப்படி வித்யாஸப்படும் என்று நமது குருநாதர் ஸமீபத்தில் பெங்களூரில் ஸ்ரீ ஸுந்தர ஆஞ்ஜனேயர் கோவிலில் செய்த ஸ்ரீ த்யாகராஜர் உபன்யாஸத்தில் அழகாக எடுத்துக் கூறினார். அது என்ன என்று பார்ப்போம்.

வேத மந்திரங்கள் பல உள்ளன. புருஷஸூக்தம், துர்காஸூக்தம், காயத்ரி மந்திரம் என்று எவ்வளவோ வைதீகமான மந்திரங்கள் உள்ளன. இந்த மந்திரங்களை ஒரு நல்ல குருவிடமிருந்து உபதேசம் வாங்கிக் கொண்டு, அவைகளின் ஸ்வரம், modulation எல்லாம் மாறாமல் ஜபம் செய்தால் தான் பலன் உண்டு. கொஞ்சம் ஸ்வரம் மாறினாலும் விபரீத பலன் ஏற்பட்டு விடும். மந்திரம் என்றால் என்ன? சில அக்ஷரங்களை ஒருவிதமாக அமைத்து கொடுப்பது தான் மந்திரம். அதற்கு ஒரு அர்த்தமும், பலனும் இருக்கும். அத்தகைய மந்திரங்களை அறிவுப் பூர்வமாக கண்டுபிடிக்காமல் ஆகாசத்தில் இருக்கும் சப்தங்களைக் கொண்டு அனுபவ பூர்வமாக, நமக்குக் கொடுத்துள்ளார்கள் ரிஷிகள். மந்திரங்களுக்கு இவ்வளவு நியமங்கள் இருக்கின்றன அல்லவா? அவை ஸ்தோத்ரங்களுக்குக் கிடையாது.

இப்பொழுது, நாம் நம் வீட்டில் காலையில், வாசல் தெளித்து, கோலம் போடும்போது, தீபம் ஏற்றும் போதெல்லாம் ஏதாவது ஸ்தோத்ரம் சொல்லிக் கொண்டு செய்வோம் அல்லவா? 'அங்கம் ஹரே புலகபூஷணம்....' என்று கனகதாரா ஸ்தோத்ரத்தை சொல்லிக் கொண்டே செய்வோம். இவைகளுக்கு நியமங்கள் கிடையாது.

நாதோபாஸனம் செய்பவர்கள் ஸங்கீதத்தினால் பகவானை ஆராதித்தார்கள். இந்த நாதோபாஸனம் என்ற மார்கத்திற்கு இரண்டு குரு இருக்கிறார்கள். ஒருவர் ஹனுமான், மற்றொருவர் நாரதர். இவர்கள் தான் ஸங்கீதம் எனும் சாஸ்திரத்தை தேவலோகத்திலிருந்து நமக்கு பூலோகத்தில் கொண்டு கொடுத்து அருளியவர்கள். அவரவர்கள் குருவிற்கு ஏற்றபடி, இப்போது ஸங்கீத வித்வான்களுக்குள்ளே எப்படி பல வித பாணி உள்ளதோ, அதே போல், சங்கீதத்தில் இரண்டு மதம் – ஹனுமத் மதம், நாரத மதம். இருவரும் ஒவ்வொரு விதமாக சங்கீதத்தை நிர்ணயித்துள்ளார்கள். முதன் முதலில் 'ஸங்கீத ரத்னாகரம்' என்ற க்ரந்தத்தை செய்து ஸங்கீத சாஸ்த்ரத்தை விவரித்தவர் வங்காளத்தை சேர்ந்த 'சார்ங்கதேவர் எனும் மஹான். இப்படியாக, இந்த நிர்ணயங்களுக்கு உட்பட்ட ஸங்கீதத்தினால் பகவானை, ஆராதிப்பது தான் நாதோபாஸனம் எனும் மார்கம்.

HUMBLE PRANAMS AT
THE LOTUS FEET OF GURUJI

DR SHRIRAAM MAHADEVAN
Consultant Endocrinologist
Endocrine & Speciality Clinic
Sri Ganesh Flats, Flat No 4, Ground floor,
Old no.72, New No 460,
TTK Road, Alwarpet, Ch – 18
Tel: 044-24350090, Mob: 9445880090
Email: mshriraam@gmail.com,
www.chennaiendocrine.com

# ப்ரேமிகவரதனுக்கு ஒரு கடிதம்

**என் அன்பு பிரேமிகவரதனுக்கு அநேக ராதே! ராதே! ராதையின் பெயர் படித்தவுடன் உன்னுடைய மனம் குளிர்ந்து முகம் மலர்ந்திருக்குமே! நானும் இவ்வளவு நாளாக ஒரு விஷயத்தை உன்னிடம் கேட்கலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டே இருந்தேன். இப்படியே யோசித்துக் கொண்டு இருந்தால் எப்படி? நாட்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனவே. அதனால் இன்று உனக்கு கடிதம் எழுதி விடுவது என்று துணிந்து விட்டேன். உனக்குக் கடிதம் எழுதலாம் என்று எங்களுக்கு முன் உதாரணமாக இருந்து வழி காட்டிய ஸ்ரீ ருக்மிணீ தாயாருக்கு முதலில் என் வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**ஒரு தாயார், தன் குழந்தை வியாதி மற்றும் அறிவு இல்லாத குழந்தையாக இருந்தால் எவ்வளவு தவிப்பாள். அதுவும் குழந்தை மூளை வளர்ச்சி இல்லாத மாற்றுத் திறனாளியாகவோ அல்லது உடலில் குறைபாடுகள் உடைய மாற்றுத் திறனாளியாகவோ இருந்தால் எவ்வளவு தவிப்பாள். எப்படியாவது, மந்திரம், தந்திரம், மாயம் என்று எதனாலாவது அந்தக் குழந்தைக்கு நிவாரணம் கிடைக்காதா என்று பரிதவித்து அங்கேயும் இங்கேயும் ஓடுவாள் இல்லையா?**

**நான் உன் குழந்தைதானே? ஞானம், பக்தி, வைராக்யம் சிறிதும் இல்லாமல் இருக்கும் என்னை நினைக்க எனக்கே அருவருப்பாக உள்ளது. அப்படியிருக்க, நீ என்னை எப்படி சகித்துக் கொண்டுள்ளாய்? இதற்கு ஏதாவது வழி செய்யக் கூடாதா? உன்னால் முடியாதது ஏதாவது உண்டா? சாப்பிட்டு, உறங்கி, பொழுது போக்கி இந்த சரீரத்தை கொழு கொழு என்று வளர்ப்பது எனக்கு அறவே பிடிக்கவில்லை. இந்த மாம்ச பிண்டத்தை வளர்ப்பதுதான் என்னுடைய பிறவியா?**

'உன் ஸாமர்த்தியத்தில் எதுவும் இல்லை; எல்லாம் பகவானுடைய க்ருபையில்தான் உள்ளது' என்கிறார்கள் பெரியவர்களான மஹான்கள். சரி அப்படியேதான் இருக்கட்டும். க்ருபை செய்யக்கூடாதா? அதற்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டுமா? உனக்கு மனது இல்லையா? உன் கௌரவம் குறைந்துவிடுமா? எந்த யோக்யதையும் இல்லாத உனக்கு எப்படி க்ருபை செய்வது என்றால், எனக்குத்தான் க்ருபை செய்யவேண்டும். யோக்யதை உடையவர்களுக்கு உன் க்ருபை எதற்கு?

'க்ருபையெல்லாம் இல்லை, நீ சோம்பேறியாக இருந்தால் பகவான் அருள்வானா! நீதான் ஜபம், தியானம், பாராயணம், கீர்த்தனம் எல்லாம் செய்ய வேண்டும்'. எனக்கு மட்டும் ஸாதனை செய்ய விருப்பமில்லையா என்ன! இந்த பிசாசு மனது சோம்பேறித்தனம் விடமாட்டேன் என்கிறது. அப்படியே சிறிது செய்தாலும் மனது ஈடுபடவில்லையென்று நன்றாகத் தெரிகின்றது. அல்லது பகட்டுக்காக செய்கின்றேன் என்று எனக்கே தெரிகின்றது. சில சமயம் ஒன்றுமே செய்யாமல் இருப்பதற்கு பகட்டுக்காவது செய்வோம், பரவாயில்லை என்று செய்ய ஆரம்பிக்கின்றேன். ஸாதனைகள் செய்ய அன்பு வேண்டும். அன்பு இல்லாவிட்டாலும் ஆசையாவது வேண்டும். ஆசை இல்லாவிட்டாலும் இயந்திரம் போன்றாவது செய்ய வேண்டும். அதற்கும் மனது வேண்டும். இதுதான் வழி என்றால் இதை நீயே என் மனதிற்குள், அறிவுக்குள் புகுந்து செய்தால் அன்றி நான் செய்யப் போவதில்லை. ஒவ்வொரு நாளாகப் போய்க் கொண்டிருக்கின்றது. வயது ஆக ஆக உட்கார முடியாது, நடக்க முடியாது, தனியாக எதுவும் செய்ய முடியாது. மனது அந்த கால கட்டத்தில் சரீரத்தின் வேதனைகளையே நினைத்துக் கொண்டிருக்கும். மரணத்தை நினைத்தாலே பயமாக உள்ளது. உடலில் ஏற்படும் சிறு வலியையே தாங்க முடியவில்லை. மரண சமயத்தில் ஏற்படும் மரண வேதனையை எப்படித் தாங்குவேன். என்னிடம் இருக்கும் குறைகளைப் பட்டியலிட ஆரம்பித்தால் அது முடிவுக்கே வராது. அப்படியிருக்க பிறருடைய குறைகளை வேறு விமர்சிக்கின்றேன். எவ்வளவோ மஹான்கள் உபதேசித்ததை நடைமுறையில் கொண்டு வந்து நான் திருந்திய பாடு இல்லை. இந்த லட்சணத்தில் பிறருக்கு வேறு உபதேசம் செய்கின்றேன்.

முக்தியில் ஆசை உள்ளவன் இந்த உலக ஆசைகள், சுவர்கத்தில் உள்ள ஆசைகள் எல்லாம் வெறுக்க வேண்டும் என்கின்றார்கள். சுவர்கத்தில் உள்ள சுகங்கள் சரியாக தெரியவும் இல்லை. புரியவும் இல்லை. அதை விட்டுத் தள்ளுவோம்.

உலக போகங்களில் ஆசையை ஏற்படுத்துவது உன் மாயைதானே? தயவு செய்து கெஞ்சி கேட்க்கின்றேன். அந்த மாயையை என்னிடமிருந்து சற்று எடுக்கக்கூடாதா? உண்மையில் என்னைக் கரையேற்றுவதில் உனக்கு விருப்பமா? அல்லது பிறவியில் தள்ளுவதில் உனக்கு இஷ்டமா? என் மனதில் காமம், பயம், கோபம் போன்ற வாசனைகள் எல்லாம் ஒரு குறையுமில்லாமல் நிறைந்து இருக்கின்றன. எப்பொழுது அருள் செய்யப் போகின்றாய்? இத்தகைய வாசனைகளுடன் நான் இறந்தால் எப்படி பிறவி வராமல் இருக்கும்? இந்தப் பிறவியே முடியவில்லை. இதிலும் ஒன்றும் கிழிக்கவில்லை. மீண்டும் பிறந்து அவதிப்பட போகின்றேனே தவிர ஒன்றும் சாதிக்கப்போவதில்லை. அது சரி, நான் எவ்வளவோ பாவங்களை துணிந்து செய்திருக்கின்றேன். இந்த சரீரம் பூத உடலை விட்டவுடன் இருண்ட உலகங்களை அடைந்து அடையக் கூடிய துயரங்களை நினைத்தால் இப்பொழுதே பயமாக உள்ளது.

சற்று ஜபம், தியானம் செய்தால் நான் குரு என்ற அஹம்பாவம் வந்து விடுகின்றது. மனது என்னவோ முக்தியில்தான் ஆசை என்கிறது. ஆனால் நான் சொல்வது தற்செயலாக நடந்து விட்டாலோ, அல்லது ஏதாவது மஹிமையை உணர்ந்தாலோ தலைகால் புரியவில்லை. மஹாத்மா என்றாலே புகழை வென்றவராக இருப்பவர்தான். இதில் பிரச்சனையே என்னவென்றால் மஹாத்மாவானால் கூட புகழ் உள்ள மஹாத்மாவாக ஆக வேண்டும் என்று ஆசைப்படும் மனதின் மாயை எத்தகையது.

சரணாகதிதான் வழி என்றால் அதுவும் முடியவில்லை. என் கையில் பணம் இல்லாது இருந்த தருணங்கள் உண்டு. ஆடைகள் இல்லாத தருணங்கள் உண்டு. அறிவு இல்லாத இருந்த தருணங்கள் உண்டு. உடைமைகள் எதுவும் இல்லாத தருணங்களும் உண்டு. இந்த சரீரம்கூட இந்த பிறவியில் வந்ததுதான். ஆனால் நான், எனது என்ற எண்ணங்களோ அநாதி காலமாக என் கூடவே வந்து கொண்டிருக்கின்றது. நமஸ்காரம்தான் சரணாகதி என்றால் செய்துவிடலாம். அதுவும் வயதானால் செய்யமுடியாது. நான், எனது இரண்டையும் விடுவதுதான் சரணாகதியாம். என்ன விளையாட்டு இது? எப்படி முடியும்?

இந்தக் கடிதத்தை மிகவும் SERIOUS ஆக எடுத்துக் கொண்டு உடனடியாக ACTIONல் இறங்கவும்.

(வங்க ஸத்சங்க அன்பர்களுடன் ஸ்ரீஸ்வாமிஜியின் ஒரு அழகிய உரையாடல் தொடர்கிறது. நாம மஹிமையைப் பற்றியான அழுத்தமான ஆழமான பதில்களை உரைத்துக்கொண்டு வந்த ஸ்ரீ ஸ்வாமிகளைப் பார்த்து பக்தர்கள் மேலும் கேள்விகளை கேட்கத் தொடங்கினர்.) ராதே ராதே ஸ்வாமிஜி! நாம் நமக்குத் தெரிந்தவர்களைப் பார்க்கும் பொழுது, அவர்கள் ஒரு மாற்று முறையை வைத்துக்கொண்டு (alternate method) தன் உடல்நிலையை சரி செய்து கொள்ளும் பழக்கத்தை நாம் பார்க்கின்றோம். பிராண சிகிச்சை, ரெய்கி என்றெல்லாம் செய்கிறார்களே இதெல்லாம் செய்யலாமா? நம் கர்மத்துடன் நாம் விளையாடுகிறோமா? இது போன்ற விஷயங்களெல்லாம் நம்மை எப்படி பாதிக்கும்? என்று கேட்டார்.

# ஒரு உன்னத உரையாடல்

- ஸ்ரீ M.K. ராமானுஜம்

ஸ்ரீ ஸ்வாமிஜி – "முதலாவதாக pranic healing, reiki தெய்வீகத்துடன் அறவே சம்பந்தம் அற்றவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தெய்வ சம்பந்தமோ தெய்வீக சம்பந்தமோ இதற்கு அறவே கிடையாது. இது நம் உபாஸனமோ அல்லது ஒரு ஆன்மீக சாதனமோ ஆகாது. இதெல்லாம் சூக்ஷ்மமான (astral) ஒரு நிலையில் மாற்றங்கள் ஏற்படுத்துவதால், உடல்நிலை சரியாகின்றது என்று அவர்கள் சொல்கிறார்கள். இது அடிப்படையாக, தத்துவரீதியாக உண்மைதான். ஆனால் இதை செயல்படுத்துபவர்கள் எந்த அளவிற்கு இதை சரியாக செய்கின்றார்கள் என்பது ஒரு கேள்விக்குறி தான். புரிகின்றதா? இந்த செயல்முறை சரிதான் என்பதில் எந்த ஒரு மறுப்பும் கிடையாது. ஆனால் செய்பவர்கள் எந்த அளவிற்கு நிபுணர்களாக இருந்து அதை சரியாக செய்கிறார்கள் என்பது கேள்விக்குறியாக இருப்பதால் இதன் பலன் என்பது செய்பவர்களை பொறுத்தே இருப்பதால், இதனால் நமக்கு முழு பலன் ஏற்படுமா ஏற்படாதா என்பதையெல்லாம் நேராக சொல்லிவிட முடியாது. செய்பவர் இதில் நல்ல நிபுணராகவும் இருக்க வேண்டும், இதில் அவருக்கு நல்ல பயிற்சியும் இருக்க வேண்டும் அனுபவமும் இருக்க வேண்டும். அவரால் நமது சூக்ஷ்ம (aura) என்று சொல்லக்கூடிய அந்த சூக்ஷ்மமான நிலையைப் பார்த்து, அதை சரிபட கையாண்டார் என்றால் நிச்சயமாக உடல்நிலையில் மாற்றம் ஏற்படுத்த முடியும். ஆனால் பலர், இப்பொழுது, நான் பிராண சிகிச்சை செய்கிறேன், ரெய்கி செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இப்படியாக ஒரு சிகிச்சையை செய்பவர்கள் பலர் அதில் நிபுணர்களாக இருக்கிறார்களா என்றால் எல்லோரும், அப்படி இருப்பார்கள் என்று அவசியம் கிடையாது. அதனால் எவ்வளவு தூரம் அவர்கள் சரியாகச் செய்கிறார்கள் என்பது ஒரு கேள்விக்குறிதான். ஆனால், இது நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கோ, தெய்வீக முன்னேற்றத்திற்கோ எந்த தடையும் கிடையாது. இதற்கும் தெய்வீகத்திற்கும் சம்பந்தம் கிடையாது. டாக்டரைப் பார்க்கச் செல்வது போல்தான் இவையெல்லாமும்" என்று சொல்லி முடித்தார்.










ஸ்ரீ பாக்யாஜியுடன் மதுரகீதம் போட்டியை மிக கோலாஹலமாக நடத்திய சிங்கப்பூர் நாமத்வார் குழு, 21 April

**ஸ்ரீ ஸ்ரீனிவாச பெருமாள் கோவில் ஸம்ப்ரோக்ஷணத்தில்
Hindu Endowments Board Chairman ஸ்ரீ R. ஜெயச்சந்திரன்,
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர் ஸ்ரீ பாக்யநாதன்ஜி,
நாமத்வார் President ஸ்ரீ பாலசுப்ரமணியன், சிங்கப்பூர், 22 ஏப்ரல்**





**மதுரஸ்மரணம்-My Guru As I See Him, சிங்கப்பூர் நாமத்வார், 20 ஏப்ரல்**




**ஸ்ரீ சிவகுமார் முரளி நிகழ்த்திய ஸ்ரீமத் பாகவத சப்தாஹம், சிங்கப்பூர்**





## காரியாப்பட்டி நாமத்வார் திறப்பு விழா, 15 ஏப்ரல்



# மதுரை நாமத்வார் திறப்பு விழா, 16 ஏப்ரல்







Greatness of Sanathana Dharma, Boston, USA, 13 April

## ஸ்ரீ ராமானுஜம்ஜியின் அமெரிக்கா சத்சங்கங்கள்



Empathetic Leadership at Dell Headuarters, Boston, USA, 24 April



# சிரத்தை

ஆனந்தபுரி நாட்டை ஒரு அரசன் ஆண்டுவந்தான். அவன் வித விதமான மாளிகைகளை கட்டுவதில் ஆர்வம் கொண்டான். அவனது இளமை பருவம் முதலாக, ராஜா என்ற கட்டிடம் கட்டும் தச்சர், அவன் விருப்பப்படியெல்லாம் அழகழகாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து வந்தார். ராஜாவிற்கு வயதாகி விட்டது. அரசனிடம் ஓய்வு கேட்டார். அரசனோ அவரை விட்டபாடில்லை! "இன்றிலிருந்து அரசு வேலைக்கு நீங்கள் ஓய்வு கொடுத்து விடுங்கள். ஆனால், எனக்காக ஒரு அழகான வீட்டை நீங்கள் கட்டித்தர வேண்டும்!" என்று, ஆசையாகக் கேட்டான் அரசன். அரசு தொழில் என்றால் செய்யும் வேலைக்குக் கூலியாவது கிடைக்கும். அரசனோ தனக்காக என்று கேட்டுவிட்டான்! கூலியும் கிடையாது! இதை கேட்ட ராஜா சோர்வடைந்தான்.

புலம்பியவாறு ஏனோ - தானோ என்று ஒரு கட்டிடம் கட்டினான். மனமுவந்து செய்யாததால் தரமும் சற்று குறைவாகவே இருந்தது.

கட்டிடமும் முடிந்தது. அந்தக் கட்டிட சாவியை அரசனிடம் ஒப்படைத்துவிட்டு, "விடுங்கள் ஆளை!" என்ற மனப்பாங்குடன் விடைபெற முயன்றான் ராஜா! எங்காவது நேராக வந்து, கட்டிட மேற்பார்வை செய்து, வில்லங்கம் செய்து விடுவாரோ இந்த அரசன், என்ற எண்ணமும் ராஜாவினுள் ஓடிக்கொண்டுதான் இருந்தது.

அரசனோ சாவியை கையில் பெற்றவுடன் ராஜாவைப் பார்த்து, "சற்று பொறு!" என்றார்.

"ஆஹா... மேற்பார்வையிட்டு தனக்கு தண்டனை தர தான் போகிறார்" என்று, நடுக்கத்துடன் அரசனின் அருகே சென்றான். அரசனோ யாரும் எதிர்பாராத விதமாக அந்த சாவியை ராஜாவிடமே கொடுத்து, "ராஜா! எனக்காக எவ்வளவு மாளிகைகள் நேர்த்தியாகக் கட்டிக் கொடுத்திருக்கிறாய்! எனக்கு ஒரு ஆசை!

உனக்கு ஒரு கட்டிடம் கொடுக்கவேண்டும் என்று...அதனால்தான் இறுதியாக ஒரே ஒரு கட்டிடம் கட்ட உன்னை ஆணையிட்டேன். அந்தக் கட்டிடம் உனக்குத் தான்! பெற்றுக்கொள்!"

அதைக்கேட்ட ராஜா கூனிக்குறுகி போனான். "ஏனோ தானோ என்று கட்டிவிட்டேனே! எனக்காகத் தான் அரசன் அதைக் கட்ட சொன்னான்! எவ்வளவு அசிரத்தையுடன் இருந்துவிட்டேன். தரக்குறைவாகக் கட்டிய இந்தக் கட்டிடத்தில் நான் தானே வாழப்போகிறேன்! தவறு செய்துவிட்டேனே!" என்று, வெட்கத்துடன் சாவியைப் பெற்றான்.

இதை வெளியே சொல்லத்தான் முடியுமா அல்லது காட்டிக்கொள்ளத்தான் முடியுமா!

இப்படித்தான் நாம் இறைவனுக்காகவோ குருவிற்காகவோ செலவிடும் நேரமும், முயற்சியும். நமது சேவையில் மகிழ்ந்து பகவான், பலனையும் அவனது அருளையும் நமக்கே தந்துவிடுகின்றான். ஆகவே, நாம் செய்யும் குரு கைங்கர்யமும், இறைகைங்கர்யமும் நமது மேன்மைக்காகத்தானே! நன்றியுடன் அதை சிரத்தையாய் செய்வதுதான் உண்மை பக்தனின் இயல்பு!




# சத்சங்க செய்திகள்

- தொகுப்பு: சிவராமன்

## ஸ்ரீ சுந்தர ஆஞ்ஜநேயஸ்வாமி பத்தாம் ஆண்டு ப்ரதிஷ்டாபனா தின மஹோத்ஸவம்

பெங்களூரு கல்கரே ஸ்ரீ சுந்தர ஆஞ்ஜநேயஸ்வாமி திருக்கோயில் வளாகம், ஸ்ரீ சீதா ராம ஹாலில் ஸ்ரீ முக்யப்ராணா ஸேவா ட்ரஸ்ட் சார்பில் உத்ஸவங்கள் கொண்டாடப்பட்டன. மார்ச் 27 முதல் காலை வேளைகளில் ஸ்ரீமத் ராமாயணம் மூல பாராயணமும் மாலை வேளைகளில் ஸ்ரீ கேசவன்ஜியின் ஸ்ரீ ராமானுஜ வைபவம் உபன்யாசமும் நடைபெற்றது. ஏப்ரல் 1-ந் தேதி மாலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் கோபகுடீர குழந்தைகள் மதுரகீதங்கள் பாடினர். அவர்களுக்கு ப்ரத்யேகமாக வினாடி வினா போட்டியும் நடைபெற்றது. ஏப்ரல் 3-ந் தேதியன்று ஸ்ரீ சீதா ராம ஹாலில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி உபன்யாசம் நிகழ்த்தினார்கள். ஏப்ரல் 4-ந் தேதியன்று ஸ்ரீ ராம பட்டாபிஷேகமும், உத்ஸவர் புறப்பாடும், மாலையில் மாபெரும் பஜனையும் மிக விமர்சையாக நடைபெற்றது. ஏப்ரல் 5-ந் தேதியன்று காலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் பல்வேறு ஹோமங்களும் ஸ்ரீ சுந்தர ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு மஹாபிஷேகமும் கீர்த்தனங்களும் பஜனையும் நடைபெற்றது. மாலையில் உத்ஸவர் புறப்பாடு மிகவும் கோலாஹலமாக நடைபெற்றது.

## காங்கேயம் நாமத்வார் ப்ரதிஷ்டாதின வைபவங்கள்

ஏப்ரல் 7-9ந் தேதி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், காங்கேயம், நாமத்வாரில், ஸ்ரீ வானர ராஜசிம்மன் ஸ்வாமி ஸன்னிதியில் காலையில் ஸ்ரீமத் ராமாயணம் மூல பாராயணமும் மாலையில் சுந்தர காண்டம் உபன்யாசமும் நிகழ்த்தினார்கள். ஏப்ரல் 8-ந் தேதி அன்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், தாராபுரத்தில் நடைபெற்ற மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு அருளுரை ஆற்றினார்கள். ஏப்ரல் 9-ந் தேதி ஸ்ரீமத் ராமாயண பூர்த்தி, ஸ்ரீ ராம பட்டாபிஷேக வைபவங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டார்கள். ஏப்ரல் 10-ந் தேதி அன்று நடைபெற்ற முதலாம் ஆண்டு பிரதிஷ்டாதின உற்சவ வைபவங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இதில் கலந்துகொண்டார்கள். ஏப்ரல் 10-ந் தேதி ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் உடுமலைபேட்டை சென்று மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை செய்தார்கள்.

## வருட பிறப்பு

ஏப்ரல் **14**-ந் தேதி 'விளம்பி' தமிழ் புத்தாண்டு பிறப்பை ஒட்டி விஷுக் கனி ப்ரேமிகபவனத்தில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் பஞ்சாங்கபடனம் நடைபெற்றது. புத்தாண்டை ஒட்டி, ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் காலையில் அகண்ட நாமஸங்கீர்த்தனமும் விசேஷ திருமஞ்ஜனமும் மாலையில் திருக்கல்யாண உத்ஸவமும் லட்ச தீபமும் நடைபெற்றது. ஸ்ரீ ஜய ஹனுமான் ஸந்நிதியில் லட்சதீபம் ஏற்றப்பட்டது.

## சென்னையில் சத்சங்கம்

சென்னை அம்பத்தூர் **GK** ஷெட்டி விவேகானந்தா வித்யாலயாவில், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ஹ டிரஸ்ட் நடத்திய வேத சப்தாஹத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் ஏப்ரல் **26**ம் தேதி அம்பரீஷ சரித்திரம் உபந்யாசம் செய்தார்கள்.

## சிங்கப்பூரில் ஸ்ரீ பாக்யாஜியின் ஸத்ஸங்கம்

சிங்கப்பூரில் பல இடங்களில் நாம மஹிமை மற்றும் குரு மஹிமை என்ற தலைப்புகளில் ஸ்ரீ பாக்யாஜி சத்சங்கங்கள் நடத்தினார். ஏப்ரல் **20**ம் தேதி நாமத்வாரில் மதுர உத்சவமும் மதுரஸ்மரணம் உபந்யாசமும் நடத்தினார். ஏப்ரல் **21**ம் தேதி மதுரகீதம் பஜனை போட்டியின் இறுதி சுற்று மிகவும் விமர்சையாக நடைபெற்றது. இதில் மதுரகீதங்களின் மஹிமையை பற்றி ஸ்ரீ பாக்யாஜி எடுத்துரைத்தார். ஏப்ரல் **22** சிங்கப்பூரில் உள்ள மிகவும் புராதனமான கோயில்களில் ஒன்றான ஸ்ரீ ஸ்ரீநிவாஸபெருமாள் கோயிலின் ஸம்ப்ரோக்ஷணம் மிகவும் கோலாஹலமாக நடைபெற்றது. இதில் முக்கியமாக சிங்கப்பூர் பிரதம மந்திரி மற்றும் சிங்கப்பூர் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். **Hindu Endowments Board Chairman** ஸ்ரீ **R.** ஜெயச்சந்திரன், ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர் ஸ்ரீ பாக்யநாதன்ஜி, சிங்கப்பூர் நாமத்வார் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ பாலசுப்ரமணியன் ஆகியவர்கள் இந்த வைபவங்களில் கலந்துகொண்டார்கள். ஸ்ரீ சிவகுமார் முரளி, ஸ்ரீமத் பாகவதம் சப்தாஹமும், உபந்யாசமும் நாமத்வாரில் நிகழ்த்தினார்.

# அமெரிக்காவில் ஸ்ரீ ராமானுஜம்ஜியின் சத்சங்கங்கள்

ஏப்ரல் **13, 14, 15** தேதிகள் **- GOD USA** சார்பில் அமெரிக்கா பாஸ்டன் நகரில், **Campbell Hall**ல் மாலை வேளைகளில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளிச்செய்த மஹாமந்திர கீர்த்தனையைப் பற்றி ஆங்கிலத்தில் **The True Protector** என்ற தலைப்பில் ப்ரவசனம் செய்தார்கள். ஏப்ரல் **27-**ந் தேதி **Texas Dallas**ல், **HUM - Win - Win Approach to Life for Young Adults** நடைபெற்றது. ஏப்ரல் **28-**ந் தேதி **Texas**ல் **Body, Mind & Soul Retreat** நடைபெற்றது.

மார்ச் **29** முதல் ஏப்ரல் **3** வரை **Edmonton, Canada**ல் சத்சங்கங்கள் நடைபெற்றன. **5-9** ஏப்ரல் **Missisuaga, Canada**ல் சத்சங்கங்கள் நடைபெற்றன. **10, 11** ஏப்ரல் **Detroit**ல் சத்சங்கங்கள் நடைபெற்றன. ஏப்ரல் **13** முதல் **15** வரை **Boston**ல் உபன்யாசங்கள் நிகழ்த்தினார். **18-22** ஏப்ரல் **Seattle**ல் சத்சங்கங்கள் நடத்தினார். **23-25** ஏப்ரல் **Bay Area, California**ல் பல இடங்களில் சத்சங்கங்கள் நடைபெற்றன.

ஏப்ரல் **1-**ந் தேதி முதல் **9-**ந் தேதி வரை காங்கேயம் நாமத்வார் ஸ்ரீ வானர ராஜசிம்மன் ஸ்வாமி ஸன்னிதியில் முரளிஜி மற்றும் ஸ்ரீ சனத்குமார் அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் மூல பாராயணம் நடைபெற்றது. மாலையில் முரளிஜி அவர்கள் ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம் செய்தார்கள். மார்ச் **26-**ந் தேதி முதல் ஈரோடு ஸ்ரீ பாலாஜி பாகவதர், மன்னார்குடி நாமத்வாரில் ஸ்ரீ ராம நவமி உத்ஸவத்தில் ஸ்ரீ தியாகராஜ ராமாயணம் உபந்யாஸம் நவாஹமாக நிகழ்த்தினார். மார்ச் **17-**ந் தேதி முதல் **25-**ந் தேதி வரை கடலூர் நாமத்வார் சார்பில் கடலூர், மஞ்சகுப்பம், ராதா செட்டி மண்டபத்தில் ஸ்ரீ சிவகுமார் முரளி அவர்களின் ஸ்ரீமத் ராமாயணம் உபன்யாசம் நடைபெற்றது. மார்ச் **24-**ந் தேதி முதல் ஏப்ரல் **3-**ந் தேதி வரை மன்னார்குடியில் ஸ்ரீ கன்யா சகோதரிகளால் ஸ்ரீமத் ராமாயணம் பாராயணம் நடைபெற்றது. ஏப்ரல் **21** முதல் மே **1** வரை வேலூர், காவேரிபாக்கம், ஸ்ரீ அழகிய ராமஸ்வாமி தேவஸ்தானம் ஸ்ரீ சுந்தரவல்லி ஸமேத ஸ்ரீ சுந்தரவரத பெருமாள் சன்னதியில் நடைபெற்ற ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தில் மாலை **6** முதல் இரவு **8.00** மணி வரை ஸ்ரீ முரளிஜி ஸ்ரீமத் ராமாயண உபன்யாசம் நிகழ்த்தினார்.

ஏப்ரல் 4-ந் தேதி முதல் ஏப்ரல் 10-ந் தேதி வரை ப்ரஹ்மஸ்ரீ கபிலவாசுதேவன், ஸ்ரீ ஸ்ரீராம் பாகவதர் அவர்களால் கன்யாகுமரி மகாதானபுரம் கிராம பஜனை மடத்தில் காலையில் ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்த பாராயணமும் மாலையில் பஞ்ச கீதம் பாராயணமும் பாகவத உபன்யாஸமும் நடைபெற்றது. ஏப்ரல் 9-ந் தேதி முதல் ஏப்ரல் 15 வரை மதுரை, பங்கஜம் காலனி, ராமகிருஷ்ண ஸமாஜத்தில் ஹரிஹர சுப்ரமணியன் அவர்களின் ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம் நடைபெற்றது. ஏப்ரல் 12-ந் தேதி முதல் 18-ந் தேதி வரை - சென்னை ஆலப்பாக்கம் மதுரமுரளிபவனத்தில், ஸ்ரீ கன்யா சகோதரிகளால் ஸ்ரீமத் பாகவதம் பாராயணம் மற்றும் உபன்யாசம் நடைபெற்றது. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள பஞ்ச ஸ்துதிகளை மையமாகக் கொண்டு ப்ரவசனம் நிகழ்த்தினார்கள். ஸ்ரீ பாலகிருஷ்ணானந்தா அவர்களின் ஆராதனையை முன்னிட்டு கோவிந்தபுரம், ஸ்ரீ சைதன்யகுடீரத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் உதயாஸ்தமன ஸப்தாஹம் துவங்கியது. ஏப்ரல் 25-ந் தேதி வரை நடைபெற்ற ஸப்தாஹத்தில் ப்ரஹ்மஸ்ரீ கபில வாஸுதேவன், ஸ்ரீதர் கனபாடிகள், பாகவதஸ்ரீ விஷ்ணுராதன், ஸனத்குமார், ஹரிஹரசுப்ரமணியன் பாராயணம் மற்றும் ப்ரவசனம் செய்தார்கள். ஏப்ரல் 27 முதல் மே 3 வரை தென்காசி, அருள்மிகு பொருந்தி நின்ற பெருமாள் கோவிலில் மந்திராலய மஹான் ஸ்ரீ ராகவேந்த்ரர் சேவா டிரஸ்ட் சார்பில் மாலை 6.30 முதல் இரவு 8.00 மணி வரை ஸ்ரீ ஸ்ரீதர் கனபாடிகள் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் உபன்யாசம் செய்தார்.

மார்ச் 31-ந் தேதி பம்மல் பாலாஜி அவர்கள் திருச்சி நாமத்வாரில் ஸத்ஸங்கம் நிகழ்த்தினார்கள். ஏப்ரல் 8-ந் தேதி - ஞாயிறு காலை பம்மல் பாலாஜி அவர்கள், மதுரபுரி ஆஸ்ரமத்தின் அருகேயுள்ள திருநீர்மலை திவ்யதேசத்தின் தேரோட்டத்தின்போது மஹாரண்யம் ஆஸ்ரமபகுதி அன்பர்களுடனும் கலெட்டிப்பேட்டை அன்பர்களுடனும் கலந்துகொண்டு நகரஸங்கீர்த்தனம் நிகழ்த்தினார்கள்.

மழை வேண்டியும், இவ்வுலகில் அமைதியும் எல்லோருக்கும் எல்லாவிதமான நன்மைகளும் கிடைக்க வேண்டியும், நம் சத்குருநாதரின் பரிபூரண ஆசியுடன் வருடாவருடம் நடைபெறும், 48நாட்கள் பகவான் யோகி ராம்சுரத்குமார் அகண்ட நாம ஜெபம், 14-04-2018 தொடர்ந்து, 31-05-2018 வரை, காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை, நமது அபயம் பஜனை மந்திரில் நடைபெற உள்ளது.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

'த்விஜ' என்றால் இருமுறை பிறவி எடுப்பது என்று அந்த சொல்லின் நேரடியான அர்த்தம். அதனால் மூன்று பேர்களை இந்த 'த்விஜ' என்ற சொல் குறிக்கும்.

முதலில் 'த்விஜ' என்றால் ப்ராம்மணன் என்று அர்த்தம். ஏனென்றால் ப்ராம்மணன் முதலில் உலகில் பிறக்கும் போது ஒரு முறை பிறக்கிறான். அதன் பிறகு அவனுக்கு உபநயனம் ஆகும் பொழுது, அதாவது பூணூல் போடும் பொழுது, அது அவனுக்கு மறு பிறவி போன்றது என்று சாஸ்திரம் கூறுகின்றது. அதனால் 'த்விஜன்' என்று பெயர் அவனுக்கு. முற்காலங்களில், முதல் மூன்று வர்ணங்களுக்கும் (அதாவது ப்ராம்மணன், க்ஷத்ரியன், வைஷ்யன்) இந்த உபநயனம் என்றது இருந்து வந்ததால், அவர்கள் எல்லோருமே த்விஜர்கள் என்று தான் அழைக்கப் பட்டார்கள்.

'த்விஜ புங்கவ' என்றால் ப்ராம்மணர்களுள் ச்ரேஷ்டமானவர் என்று அர்த்தம். ஏனென்றால் 'புங்கவ' என்றால் ச்ரேஷ்டமானது என்று பொருள். அதே போல் அதற்கு எதிர் மறையாக - 'த்விஜ பந்து' என்றால் பெயரளவில் ப்ராம்மணனே தவிர, அவன் ப்ராம்மணன் என்று அழைக்கப் படும் தகுதியை இழந்தவன் என்று அர்த்தம்.

த்விஜ

என்றோ ஒரு நாள் அவன் நல்ல ப்ராம்மணனாகா இருந்தால், ‘த்விஜ பந்து’, த்விஜர்களுக்கு பந்து என்று கூறப்படுகிறான். உதாரணத்திற்கு அஜாமிளனை ‘த்விஜ பந்து’ என்று கூறலாம்.

அடுத்ததாக, ‘த்விஜ’ என்றால் பக்ஷி என்று அர்த்தம். ஏனென்றால், ஒரு பக்ஷியானது தாய் பறவையிடமிருந்து முதலில் முட்டையாக ஒரு பிறவி எடுக்கின்றது. பிறகு, அந்த முட்டையிலிருந்து குஞ்சு பறவையாக வெளி வரும் பொழுது, அது மீண்டும் பிறக்கின்றது. அதனால் பக்ஷியும் ‘த்விஜ’ என்று அழைக்கப் படுகின்றது.

ப்ருந்தாவனத்தை சரத் காலத்தில் வர்ணிக்கும் போது ஸ்ரீ சுகர், ‘த்விஜகுலகுஷ்ட ஸர:ஸரின் மஹீத்ரம்’ - என்கிறார். அதாவது பக்ஷிகளின் (த்விஜ குல) இனிமையான சப்தங்களால் ப்ருந்தாவனத்தில் உள்ள மலைகள், குளங்கள், அருவிகள் எல்லாம் எதிரொலித்தன என்கிறார்.

அடுத்ததாக ‘த்விஜ’ என்றால் பல் என்று அர்த்தம். நம் எல்லோருக்கும் குழந்தையாக இருக்கும் போது ஒரு முறை முளைக்கிறது. அதற்கு milk tooth என்று பெயர். பிறகு அது விழுந்து, உறுதியான permanent tooth என்ற பற்கள் வளருகின்றன அல்லவா? இரு முறை முளைப்பதால் பற்களுக்கும் ‘த்விஜ’ என்று பெயர். ஸ்ரீமத் பாகவதத்தில், ருத்ர கீதத்தில், பகவான் ருத்ரன் பகவானின் ரூபத்தை வர்ணிக்கும் பொழுது ‘ஸுத்விஜம் ஸுகபோலாஸ்யம்’ என்கிறார். அதாவது அழகான பற்களை உடையவர் (ஸுத்விஜம்), அழகான கன்னங்களை உடையவர் (ஸுகபோலாஸ்யம்) என்று பொருள்.

“மதுரமுரளி” ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- D.D /M.O/Cheque in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: Guruji Sri Muralidhara Swamigal Mission, Plot No.11, Door No. 4/11, Netaji Nagar Main Road, Jafferkhanpet, Chennai - 83. மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.

# பாரம்பரிய பொக்கிஷங்கள்

‘கதகளி’ என்பது 17ஆம் நூற்றாண்டில், கோவில் சிற்ப வடிவங்களிலிருந்து உருவான, இந்துமதத்தை அடிப்படையாகக் கொண்ட, ஒரு புனித நாட்டிய நாடகக் கலையாகும். இது பக்தி, நாடகம், நடனம், இசை, ஒப்பனை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு அற்புத கலையாகும். கதகளி, நமது தொன்மையான மரபையும் பாரம்பரியத்தை உள்ளடக்கிய ஒரு முதல்தரக் கலையாகும். இது வெறும் நாட்டிய நாடகம் அன்று! அது, நல்லனவற்றிற்கும் தீயனவற்றிற்கும் நடக்கும் போராட்டத்தின் வாயிலாக பக்தியை வெளிப்படுத்தும் ஒரு படைப்பாகும்.

பொதுவாக இந்திய இலக்கியங்கள், அவர் அவர்களுடைய வசிப்பிட மற்றும் புரியக் கூடிய மொழிகளில், தலை முறைத் தலைமுறையாக நாட்டுப் புறங்களில் வந்துகொண்டு இருக்கின்றன. நமது தொன்மைவாய்ந்த பண்டைய பாரம்பரிய கலாசாரத்தை, நாடகவடிவில் காண்பதற்கான ஒரு சிறந்த வழியாக கதகளி விளங்குகின்றது.



# கதகளி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பரதமுனி நாடகம், நாட்டியம், இசை, ஒப்பனை ஆகியவற்றிற்கான ஒரு வழிமுறைகளை கொடுத்துள்ளார். கதகளியில் காணப்படும் கதா பாத்திரங்கள், கோவில் கற்சிலைகளில் காணப்படும் இராமாயண மற்றும் மஹாபாரதத்தின் கதாபாத்திரங்களிலிருந்து உருவாக்கப்பட்டவை. மேலும் இது, கோவில் வழிபாட்டு முறை மற்றும் கிராமியக் கலைகளான கூடியாட்டம், கிருஷ்ணனாட்டாம் மற்றும் கூத்தா போன்றவற்றிலிருந்து பல அம்சங்களைக் கிரஹித்து உருவாக்கப்பட்டுள்ளது. பன்நெடுங்காலமாக கோவில் மண்டபங்களில், இந்து பக்திப் படைப்புகளானவை இதன் வாயிலாக அரங்கேற்றப்பட்டு, நமது முன்னோர்களின் வாழ்வியல், அவர்களின் ஆன்மீக முன்னேற்றம் ஆகியனவற்றை பார்ப்பவர்களின் அனுபவத்திற்கு கொண்டுவந்து கொண்டிருக்கின்றது. மேலும் இது, சம்ஸ்க்ருத படைப்புகளில் உள்ள ஆழ்ந்தக் கருத்துக்களை சாமான்யர்களுக்கு புரிய வைத்துள்ளது.


17வது நூற்றாண்டின் மத்தியில் கொச்சியில் வாழ்ந்த வேட்டது ராஜா, கதகளியில் பல முன்னேற்ற யுத்திகளை புகுத்தினார். இரண்டு பாடகர்கள் ஒத்திசைவிற்காகவும், செங்கிலா தாளத்திற்காகவும், சண்ட வாத்தியம் மேளத்திற்காகவும், கதாபாத்திரத்தினை அறிமுகப்படுத்த திரைசிலைகளும் இவர் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்டன. கோட்டக்கரா அரசன் மேலும் சில முக்கிய மாற்றங்களை கதகளியில் புகுத்தினார். சம்ஸ்க்ருதத்தோடு மலையாள மொழிப் பாடல்களும் இதில் சேர்க்கப்பட்டன. இதனால் கோவில்களில் சாதாரண மக்களும் இக்கலையினை ரசிக்கலாயினர். இதன் காரணமாக அரிய புனித இந்துமதக் காவியங்கள் சாமான்ய மக்களுக்கும் சென்று சேர்ந்தது. கோட்டையத்தின் மன்னன் எழுதிய நான்கு கதைகள் கதகளியின் அடித்தளமாக மாறி, அது கதகளி செய்பவர்கள் கட்டாயம் தெரிந்து அறிந்து கொள்ளவேண்டியதாக ஆகியது.


பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் களி யோகம் என்ற கதகளி குழு உருவாக்கப்பட்டு அது கதகளி மேலும் முன்னேற உதவியது. களி யோகம் என்ற குழு, ஒரு பண்பட்ட கதகளி நடிகரால் வழிநடத்தப்பட்டது. அவரே மற்ற பிற நடிகர்களுக்கு கலையை சொல்லிக் கொடுப்பது, ஒத்திகை பார்ப்பது மற்றும் கேரளா முழுவதும் நிகழ்ச்சி நடைபெற ஏற்பாடு செய்வது போன்றவற்றின் முழு பொறுப்பாளர் ஆவார். கதகளியின் மேம்பட்ட ஒப்பனை, கடினமான மேளதாளம், உணர்ச்சிப் பூர்வமான பாடல் மற்றும் வலுவான நடிப்பு ஆகியன மென்மேலும் உலக மக்களை தன்பால் கவர்ந்திழுக்கும்.

# சைதன்ய மஹாப்ரபு - 20

## விஷ்ணுப்ரியாவின் திருக்கல்யாணம்

ஓவியர் : கோவி




அவ்விஷயமாக, சசி மாதா தரகரிடம் சென்று விசாரித்தார்.
உங்களுக்கு ராஜ பண்டிதரின் புதல்வி விஷ்ணு பிரியாவை பற்றி தெரியுமா?
நன்றாக தெரியுமே. புரிகின்றது. அவள் நம் நிமாயிர்க்கு ஏத்த பொருத்தம் தான்..
அவர்களோ மிக பணக்காரர்கள் ஆயிற்றே!!
நிமாயியின் சம்பந்தத்தை யார் தான் மறுப்பார்.. அவரோ இந்த நவத்வீபத்தில் மிக பெரிய பண்டிதர் ஆயிற்றே. ராஜபண்டிதரும் இதை எண்ணி நிச்சயமாக மகிழ்சிகொள்வார்.
பண்டிதரே! சசி மாதாவின் புதல்வன், நிமாயியை பற்றி தங்களின் அபிப்பிராயம் என்ன? அவருடன் உங்கள் மகளை திருமணம் செய்வதை பற்றி என்ன நினைகின்றீர்?
அதை பற்றி நானே பேசவேண்டும் என்று நினைத்து இருந்தேன். இதில் எனக்கு மிக்க சந்தோஷம் தான்.
உடனே இதை பற்றி சசி மாதா...
ராஜபண்டிதரின் புதல்வி, விஷ்ணு ப்ரியா உனக்கு எல்லாவிதத்திலும் ஏத்தவளாக இருப்பாள் என்று எனக்கு தோன்றுகிறது. இதில் உன் கருத்து என்ன?
தங்கள் இஷ்டம் தாயே!!
இத்தகவலை உடனே ராஜபுன்டிதரிடம் தெரிவித்தார்கள்.
இதை கேள்வி பட்ட விஷ்ணு ப்ரியா, எல்லையில்லாத ஆனந்தம் அடைந்தாள்
உனது உண்மையான விஷ்ணு பக்தியினால் உனக்கு விஷ்ணுவிற்கு சமமான குணங்கள் உடைய நிமாயியை கணவனாக அடைய பாகியம் கிடைத்துள்ளது
நீ பாக்யவதி!!


மறுநாள், நிமாயியின் கல்யாணத்தை பற்றி கேள்விபட்டு , புத்திமந்தகான் என்ற பெரிய பணக்காரன் அவரை தேடி வந்தார்...
நிமாயி.. உமக்கு சனாதன மிஸ்ரரின் புதல்வியுடன் திருக்கல்யாணம் என்று ஊரே பேசி கொல்கின்றது. உண்மையா? அவ்வாறெனில், தயவு கூர்ந்து யாமே உங்கள் கல்யாண செலவை ஏற்று கொள்வோம்...
எனக்கும் நிமாயியின் கல்யாண செலவை ஏற்றுக்கொள்வதற்கான பாக்கியத்தை கொடுங்கள்.....
ஆகட்டும் முகுந்த சஞ்சயரே!! நாம் இருவரும் சேர்ந்து கல்யான செலவை ஏற்றுக்கொள்வோம். சிஷ்யர்கள் எல்லோரும் ஏற்பாடுகளை செய்யட்டும்.
கோலாஹலமாக ஊரே நிமாயி விஷ்ணு ப்ரியாவின் திருக்கல்யாணத்தை எடுத்து நடத்தினர். ஆனந்தத்துடன் சசி மாதா மற்றும் சனாதன மிஸ்ரர் அத்தம்பதிகளை மனமாற வாழ்த்தினர்.

# India's 1st Bullet Train Terminal to Have Dandi March Theme, Revolving Solar Charkha!

Apr 14, 2018
The Better India

**தற்பொழுது நாடு முழுவதும் இயங்கும் எந்தவொரு ரயில் போலும் அல்லாமல், வசதிகள் நிறைந்திருக்கும் இந்தியாவின் முதல் மும்பை-அகமதாபாத் புல்லட் ரயில், 2022 முதல் செயல்படும். தற்போது, பி.கே.சி யில் இருந்து தானே வரை வாடகை வண்டியில்(taxi) செல்ல, ரூ. 650 கட்டண விலையில், 90 நிமிடங்கள் எடுக்கும். இந்த ரயில், மூன்று மடங்கு குறைந்த விலையில், 15 நிமிடங்கள் தான் எடுக்கும். மேலும், நீங்கள் அகமதாபாத் வரை பயணம் செய்ய நேர்ந்தால், மகாத்மா காந்தியின் ப்ரஸித்தியான தண்டி யாத்திரையை கருவாக (theme) கொண்ட ஒரு நிலையத்திற்கு வருவீர்கள்.**

**மேற்கூரையில் சூரிய தகடு, ஒரு சுழலும் சக்கரத்தை போன்று வடிவமைக்கப்படும். மேலும் முனையமானது ஒரு 400 மீட்டர் பாதசாரி பாலம் கொண்ட தளங்களுடன் இணைக்கப்படும்.**

**இதற்கான கட்டுமான பணி, இந்த ஆண்டின் பிற்பகுதியில், டிசம்பர் மாதத்தில் தொடங்குகிறது; இந்த திட்டத்திற்கான காலக்கெடு ஆகஸ்ட் 15, 2022 ஆகும்.**

**புல்லட் ரயில்கள் பயன்படுத்தப்படுவதால், அதிவேக ரயில் பாதை, இணைப்புகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறுகிய பயணநேரத்துடன், நியாயமான கட்டணமும் கூடிய இம்முன்முயற்சி மக்கள் வரவேற்கும் விதமாக உள்ளது. எல்லா வித நவீன வசதிகளுடன் இந்த புல்லட் ரயில் உருவாக்கப்பட்டுவருகின்றது. மணிக்கு 320 கி.மீ வேகத்தில் பயணம் செய்யும்போது இயற்கைக்காட்சி பறந்து செல்வது போல் காணப்படும். ரயில்வே பெட்டிகள் இதுவரையில் பார்த்தறியாததாக முற்றிலும் புதுமையானதாக இருக்கும்.**

| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 2 மே 2018 | அருப்புக்கோட்டையில் யோகி ராம்சுரத்குமார் பஜனாஸ்ரமம் திறப்பு |
| 4-10 மே 2018 | உபந்யாஸம், நாரத கான சபா, சென்னை |
| 11 மே 2018 | ஏகாதசி |
| 12,13 மே 2018 | கடலூரில் சத்சங்கம் |
| 17 மே 2018 | ரோஹிணி நக்ஷத்ர புறப்பாடு, சேங்கனூர் |
| 20-29 மே 2018 | வசந்தோத்சவம் |
| 25 மே 2018 | ஏகாதசி |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email: helpdesk@madhuramurali.org
Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி

Dr.A.BHAGYANATHAN,
Personal Secretary to
HIS HOLINESS
SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No 11, Door No 4/11,
Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email :
contact@namadwaar.org

மதுரமுரளி

- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.



பஞ்சாங்க படனம், ப்ரேமிக பவனம், சென்னை, 14 ஏப்ரல்




அம்பரீஷ சரித்திரம் உபந்யாசம், அம்பத்தூர், சென்னை, 26 ஏப்ரல்

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/1995
Regd. No. TN/CC(S)DN/119/18-20
WPP No. TN/PMG(CCR)WPP—608/2018-2020

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar